சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2010–2011–ம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம் – செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தினை (Regional Early Diagnostic Centre) தூத்துக்குடி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் நிறுவ ரூ.18.10 இலட்சம் 2010–2011–ல் ஒப்பளிப்பு செய்தல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.2) துறை

அரசாணை(நிலை) எண்.15 நாள்: 25–05–2010

வைகாசி 11, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:–

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கடிதம் நாள் 31.12.09.

--------

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தனது கருத்துருவில், இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 5 குழந்தைகள் பிறவியிலேயே செவித்திறன் குறையுடன் பிறக்கின்றன என்றும், இவ்வாறு பிறக்கும் குழந்தைகளில் இக்குறையை 1--முதல் 3 வயதிற்குள் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் குழந்தையின் பேச்சு மற்றும் மொழித்திறன் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது என்றும், மேலும் நான்கில் மூன்று குழந்தைகள் நடுக் காதில் ஏற்படும் நோயால் (Otitis Media) பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். காதில் நோய் ஏற்பட்டால் தற்காலிக செவித்திறன் குறையும் என்றும் அதனால் பேச்சுத் திறனும் மொழித் திறனும் பாதிப்படையும் என்றும், இந்நோயினை குணப்படுத்தாமல் விட்டுவிட்டால், இக்குறை நிரந்தரமாகிவிடும் என்றும் செவித்திறன் குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சையும், பயிற்சியும் அளித்தால் குழந்தையின் பேச்சு மற்றும் மொழித்திறன் வளர்ச்சி, அவர்களின் வயதினையுடைய குழந்தையின் இயல்பான பேச்சு மற்றும் மொழித் திறன் வளர்ச்சிக்கு இணையாக இருக்கும் என பல்வேறு ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கூறிய காரணங்களால், குழந்தை பிறந்தவுடனேயே செவித்திறன் குறையைக் கண்டறிய பரிசோதனையும், பின்னர் குழந்தை பருவம் முழுவதும் தொடர்ந்து செவியினை பரிசோதித்துக் கொள்வதும் மிகவும் முக்கியமானதாகும் என்றும், பிறந்த குழந்தைகளுக்கு செவி ஒலி வெளிக் கொணர் பரிசோதனை (Oto Acoustic Emission) மற்றும் மூளை தண்டுவடம் மறுபதில் செவி பரிசோதனை (Auditory Brainstem Response) போன்ற பரிசோதனைகளை செய்வது செவித்திறன் குறையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதலுக்கும் பயிற்சி அளிப்பதற்கும் முதல் படியாகும் என்றும், செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறியும் ஆரம்பநிலை பரிசோதனை மற்றும் பயிற்சி மையத்தினை, தென் மாவட்டங்கள் பயன் அடையும் வகையில் தூத்துக்குடி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் செயல்பட அனுமதிக்கலாம் என்றும், இம் மையத்தின் மூலம், பிறந்த குழந்தைகளுக்கு காது பரிசோதனையும், 0–5 வயதிலான செவித்திறன் குறையுடைய குழந்தைகளுக்கு ஆரம்ப நிலை பயிற்சியும்

அளிக்கப்படும் என்றும் மேலும், இம்மையத்திற்கென வாங்கப்படும் கருவிகளைக் கொண்டு, கீழ்க்காணும் பரிசோதனைகளைச் செய்யலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

1. காது மூக்கு தொண்டை பரிசோதனை
2. தூய ஒலி செவிமானியுடன் பார்த்தல் (Pure Tone Audiometry - PTA)
3. மூளை தண்டுவடம் மறுபதில் செவி பரிசோதனை (Auditory Brainstem Response- ABR)
4. செவி ஒலி வெளி கொணர் பரிசோதனை (Oto Acoustic Emission- OAE)
5. பேச்சு மற்றும் மொழித் திறன் வளர்ச்சி பரிசோதனை
6. செவித்திறன் கருவி பொருத்துதல்
7. ஆரம்ப நிலைப் பயிற்சித் திட்டம் ( Early Intervention Programme)

2. மேலும் இப்பரிசோதனை மையத்தின் மூலம் தென் மாவட்டங்களிலுள்ள செவித்திறன் குறைவுடைய மாற்றுத் திறனாளி இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் பயன்பெறும் என்றும், இத்திட்டத்திற்கான செலவினம் பின்வருமாறு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

| வ.எண். | தொடரா செலவினம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | செவி ஒலி வெளி கொணர் பரிசோதனை (Oto Acoustic Emission) | 3,50,000/– |
| 2. | மூளை தண்டுவடம் மறுபதில் பரிசோதனை (Auditory Brainstem Response Audiometry) | 7,50,000/– |
| 3. | தூய ஒலி செவிமானியுடன் பார்த்தல்–பார்த்தலை வளப்படுத்தும் பரிசோதனை வசதி (Pure Tone Audiometry with Peep show / free field facility) | 2,25,000/– |
| 4. | ஒலி உட்புகாத அறை (Sound Treated Room) | 4,00,000/– |
| 5. | குளிர்சாதன அறை (Air Conditioned Room) | 35,000/– |
| 6. | அறைகலன் / பரிசோதனை நாற்காலி / டேபிள் | 30,000/– |
| 7. | செவிமானி–விளக்குடன் (Otoscope with light) | 20,000/– |
| | **மொத்தம்** | **18,10,000/–** |

எனவே, செவித்திறன் குறைபாடு உடைய மாற்றுத் திறனாளி இளஞ்சிறார்களுக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தினை (Regional Early Diagnostic Centre) தூத்துக்குடி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் நிறுவ ரூ.18.10 இலட்சம் 2010–2011–ம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும் 2010–2011ம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, குழந்தை பிறந்தவுடனேயே செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறியும் பரிசோதனையும், பின்னர் குழந்தை பருவத்தின் போது தொடர் செவித்திறன் பரிசோதனைகளையும் மேற்கொள்வதும் இக்குறைபாட்டை கட்டுப்படுத்த மிகவும் அவசியமானதாகும் என்றும், பிறந்த குழந்தைகளுக்கு ‘செவி ஒலி வெளி கொணர் பரிசோதனை’ (Oto Acoustic Emission) மற்றும் ‘மூளை தண்டுவடம் மறுபதில் செவி பரிசோதனை’ (Auditory Brainstem Response) போன்ற பரிசோதனைகளை மேற்கொள்ள மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையம் (Regional Early Diagnostic Centre) ஒன்று தூத்துக்குடியில்

அமைக்கப்படும் என்றும், பரிட்சார்த்தமான அடிப்படையில் அதன் செயல்பாடுகளைக் கண்டறிந்த பின்பு, இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்த அரசு 2010–2011–ம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தினை தூத்துக்குடி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் நிறுவ ரூ.18.10 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியளித்தும் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி –3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> " 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02 சமூக நலன் –101 மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II –மாநிலத் திட்டம் MN செவித்திறன் குறைபாடுடையோருக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தினை நிறுவுதல் –09 உதவித் தொகை –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".
> (த.தொ.கு. 2235 02 101 MN 0938)

5. இவ்வாணை நிதித்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. நிதித்துறை அ.சா.எண்.Fin(SW)/24574/10-1, நாள் 7.5.2010.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35 (பெயரில்)
நகல்:
நிதி (மாற்றுத் திறனாளிகள் நல)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.